செ.வெ.எண். 143. நாள். 25.2.2009

நெடுஞ்சாலைத் துறை

## செய்திக் குறிப்பு

### நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களுக்கு புதிய ஈப்புகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு தங்கள் பகுதிகளில் நடைபெறும் பணிகளை சென்று கண்காணிப்பதற்கு ஏதுவாக தலா **ரூ. 4,80,000/–** மதிப்புள்ள **73** நான்கு சக்கர வாகனங்களை (பொலிரோ ஜீப் – மகேந்திரா நிறுவன தயாரிப்பு) **ரூ. 3.5** கோடி செலவில் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் **திரு. வெள்ளக்கோவில் மு. பெ. சாமிநாதன்** அவர்கள் தலைமையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் **திரு. மு. க. ஸ்டாலின்** அவர்கள் 25.02.09 அன்று காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்கள்.

மேலும், இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த

தலைமைப் பொறியாளர் (பொது) திரு. பா. ஹரிராஜ்,

தலைமைப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திரு. கருணாமூர்த்தி,

~~தலைமைப் பொறியாளர் (நெ) தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் திரு. பாலகிருஷ்ணன்,~~

தலைமைப் பொறியாளர் (நெ) வடிவமைப்பு திரு. கோபால் மற்றும்

தலைமைப் பொறியாளர் (நெ) மெட்ரோ திரு. கோதண்டம்

நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் திரு. குற்றாலலிங்கம்

ஆகியோர் கலந்து கொண்டனர்.